Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை -08 24-11-2003 திங்கட்கிழமை ஓசை 279

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், படம் பிறேம் செய்தல் அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்

யாழ் சாலை, கிளிநொச்சி. (கி-8689)

R.V. பந்தல்சேவை தர்மபுரம்.

# தமிழ்மக்களின் அபிலாசைகளுக்கு ஒருபோதும் சிங்களப்படைகள் மதிப்பளிக்கப் போவதில்லை

## மாவீரர் எழுச்சி நாள் தொடர்பில் ஆயுதப்படையின் நடவடிக்கைக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கண்டனம்

**சிங்கள இனவெறியிலும், தமிழ் விரோதப் போக்கிலும் ஊறித்திளைத்த சிறிலங்கா ராணுவத்தினரும் பொலிசாரும் தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு ஒருபோதும் மதிப்பளிக்கப் போவதில்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப் படுத்தப்படுகின்றது. தமிழீழத் தேசிய மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் தொடர்பில் சிறிலங்காவின் ஆயுதப்படைகள் கடந்த சில நாட்களாக நடந்து கொள்ளும் விதம் இதனையே உணர்த்துகின்றது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் கடந்த வாரம் சிறிலங்கா ராணுவத் தரப்பு இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் வழங்கிய உறுதிமொழி சிங்களப் படையினரால் மிதிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.குடாநாடெங்கும் தமிழ் மக்கள் நலனுக்காகப் போராடி வீழ்ந்த வீரர்களை நினைவு கொள்ள அமைத்து வரும் அலங்கார வளைவுகள், கொடிகள், பதாகைகள் என்பன அறுத்தெறியப்படுகின்றன. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மக்கள் ஆயுத முனையில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்த ஒருவயதுப் பெண்குழந்தை மரணம்



வீட்டில் இருந்த தண்ணீர் வாளிக்குள் தலைகீழாக விழுந்த ஒரு வயதுப் பெண்குழந்தை மூச்சுத் திணறி மரணமானது.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு கிளிநொச்சி செல்வாநகர்ப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தந்தையுடன் வியாபார நிலையத்தினுள் இருந்த மேற்படி குழந்தை நிலையத்தில் வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது தந்தைக்குத் தெரியாது, வியாபார நிலையத்திற்குப் பின்புறமாகச் சென்று நீர் இருந்த வாளியினை எட்டிப்பார்த்தபொழுது வாளிக்குள் தலைகீழாக விழுந்துள்ளதாகவும், வியாபார நிலையத்தில் நின்ற மகளைக் காணவில்லையென்று தேடிய பொழுது வியாபாரநிலையத்திற்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## அலங்கார வளைவுகளை அமைக்க யாழில் படையினர் தொடர்ந்தும் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்றும் மாவீரர் தின அலங்காரங்கள் மேற்கொள்வதற்குப் படையினர் பலத்த இடையூறுகளை மேற்கொண்டனர் எனினும் மக்கள் அவற்றையும் பொருட்படுத்தாது அலங்கார வளைவுகளை அமைத்தனர்.

மாவீரர் தின ஏற்பாடுகளில் வின்சர் தியேட்டர் பகுதியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்களை அவற்றை நிறுத்துமாறு படையினர் வற்புறுத்தியதன் காரணமாக தோன்றிய படையினர் மற்றும் இளைஞர்களிடையேயான வாக்கு வாதங்களையும், முரண்பாடுகளையும் தொடர்ந்து இப்பகுதிக்கு துருப்புக்காவிகள் மூலம் கொண்டு வந்து குவிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான விசேட அதிரடிப் படையினரும், கலகம் அடக்கும் பொலிசாரும் யாழ். நகரின் காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் அப்பையாவிற்கு நேற்று நினைவுக்கல் திரை நீக்கம்

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் லெப். கேணல் அப்பையா அண்ணரின் நினைவுக் கல் நாட்டும் நிகழ்வு நேற்று விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்றது.

முன்னதாக விசுவமடுவில் உள்ள அவரின் தற்காலிக இல்லத்தில் வைக்கப்பெற்றிருந்த அவரின் உருவப்படத்திற்கு மூத்த தளபதி பொட்டம்மான் உட்பட பல போராளிகளும், பொது மக்களும் வீரவணக்கம் செய்தனர். பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் உருவப்படம் அலங்கரிக்கப்பெற்ற வாகனத்தில் ஊர்வலமாக விசுவமடு மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டது.

அங்கு விசுவமடுப் பிரதேசப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் வீரவணக்கக் கூட்டம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் படைமுகாம் அழிப்பு வெற்றி நிகழ்வில் கரும்புலி போர்க்கின் உருவச்சிலை திறப்பு

மாங்குளம் சிறிலங்கா முகாம் அழிப்பின் 13 ஆண்டு நிறைவு வெற்றிவிழா நேற்று அப்பகுதியில் சிறப்புற நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை தளபதி கேணல் சொர்ணம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை தளபதி கேணல் ஜெயம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாங்குளம் படைமுகாம் வெற்றிகொள்ளப்பட்டதன் வெற்றிச் சுடரை பாண்டியன் ஏற்றிவைக்க,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

பளைப்பகுதியில் நேற்று அரவம் தீண்டி போராளியொருவர் சாவடைந்தார்.

2ஆம் லெப். நவேந்திரன் (சின்னத்தம்பி துசிக்காந்தன் முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### மாவீரர் நினைவு வர்ணப்படம்

மாவீரர் தினத்தையொட்டி மாவீரர் நினைவு வர்ணப்படம் இன்றைய ஈழநாதம் மக்கள் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.



## தேசியக் கொடியேற்றலுடன் நாளை தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பம்

வன்னிப் பிரதேசமெங்கும் மாவீரர் எழுச்சி நாள் நாளை காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும்.

பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடியேற்றல், மாவீரர் திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை என்னும் வரிசை ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெறும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் நவம்பர்-27

**மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல; நாம் கண்ணீர் சிந்திக்கவலை கொள்ளும் சோக தினம் அல்ல. இன்றைய நாள், ஒரு தேசிய எழுச்சி தினம்; எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சித்தினம்.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

## வரி விளம்பரம்

**பல்கட்டும் நிலையம்**

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது. வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

**அமல் பல் மூக்குக் கண்ணாடி அகம்**

கண்பரிசோதித்தல், தகுந்த கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர்புக்கு: புதுக்குடியிருப்பு,பரந்தன்சாலை.(3736)

# மல்லாவி வைத்தியசாலையில் மாதமிரு தினங்கள் பற்சிகிச்சை

மல்லாவி மருத்துவமனையில் மாதம் இரு முறை பற்சிகிச்சை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாதத்தில் முதல் புதன்கிழமையும் மூன்றாவது புதன்கிழமையும் பல் வைத்திய நிபுணர் செல்வி மதுவந்தி அவர்கள் பற்சிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாக மல்லாவி வைத்திய அதிகாரி திருமதி ஏகம்பரமூர்த்தி அவர்கள் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதகாலமாக இங்கு பல்வைத்தியர் இன்மையால் இப்பகுதி மக்கள் பற்சிகிச்சை பெறுவதற்கு வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (24)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



**2ஆம் லெப். மாலா**

*(சிங்கராசா மேரிவசந்தா)*

நெடுந்தீவு

தோற்றம் 17-01-1980

வீரச்சாவு 24-11-1999

சம்பவம்: ஓயாத அலைகள்-3இன் அடம்பன் பகுதியில்.

தகவல்:

**நீ. அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்.**

யோகபுரம்,
மல்லாவி. (3897)

# யு.என்.எச்.சி.ஆரின் மனிதாபிமான உதவிகள் எத்தகைய அரசியல் மாற்றத்தாலும் தடைப்படாது

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து மீள்குடியேற்றம் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கும். எத்தகைய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் தமது நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் இருக்காது என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிநிதி செல்வி வல்லயபுர தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தைச் சேர்ந்த இவர் அண்மையில் மட்டக்களப்பிற்கு வந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். இவர் மட்டக்களப்பு செயலகத்தில் அரசாங்க அதிபர் இ.மோன குருசாமியை சந்தித்து யு.என். எச்.சி.ஆர். மேற்கொள்ளும் பணிகள் பற்றி ஆராய்ந்தார்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் சேம நலன்கள் புனர்வாழ்வுத்திட்டங்கள்பற்றியும் இன்னமும் அகதி முகாம்களில் வாழும் மக்களின் குடியேற்றம் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது. மக்கள் தத்தம் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்பதே யு.என்.எம்.சி.ஆர். அமைப்பின் பிரதான நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## மிதிவெடி அகற்ற கோரிக்கை

ஊரெழுப் பகுதியில் விளைநிலப் பரப்புகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி விவசாய நடவடிக்கையில் ஈடு படுவதற்குரிய அனுமதியைப் பெற்றுத் தருமாறு கோரி அப்பகுதி விவசாய மக்கள் அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். 1995 ஆம் ஆண்டிலிருந்து இவ் விளைநிலப் பரப்புக்களில் ஏராளமான கண்ணிவெடிகளை இராணுவத்தினர் புதைத்துள்ளனர். இதனால் தாங்கள் கடந்த எட்டு ஆண்டுகளாக இவ் விளைநிலங்களில் வேளாண்மை மேற்கொள்ளவில்லை என சுட்டிக்காட்டியதுடன் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இக்கோரிக்கையில்தெரிவித்துள்ளனர்.(33)

## மாவீரர்களின் பெற்றோர்களை பதிவு செய்யக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர்நாள் அன்று மாவீரர்களின் சுடர் ஏற்றுவதற்காக இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்ல வேண்டிய மாவீரர்களின் பெற்றோர்களைத் தத்தமது பிரதேச அரசியல்துறைச் செயலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (10)

**- வவுனியா மாவட்டத்தில் -**

# போதைப்பொருள் பாவிப்போர்மீது கடும் நடவடிக்கைக்கு உத்தரவு

எவர் போதைப் பொருள் பாவித்தாலும் சட்டரீதியாக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் வவுனியாப் பொலிசாருக்கு கடுமையான உத்தரவு இட்டுள்ளார்.

அண்மை நாட்களாக வவுனியா மாவட்டத்தில் 'ஹெரோயின்' போதைப் பொருள் பாவனை படுமோசமாக அதிகரித்துள்ளதுடன் விற்பனையும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து போதைப் பொருள் பாவித்தாலோ அல்லது விற்பனை செய்தாலோ,வைத்திருந்தாலோ கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வவுனியாப் பொலிசாருக்கு கடுமையான கட்டளையினை நீத வான் எம்.இளஞ்செழியன் கட்டளையிட்டுள்ளார். (21)


# நவம்பர் 27 முல்லை நகரில் மாவீரர் பெருவிழா 2003

**முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள்,**
**முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்,வர்த்தக சங்கம்,**
**ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,**
**பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், விளையாட்டுக் கழகங்கள், முல்லை நகர் புனரமைப்புக்குழு,தேசிய எழுச்சிப்பேரவை.**

ஆகிய பொது அமைப்புக்களுடன் இணைந்து கடற்புலிகள் எடுக்கும் பெருவிழா

## இடம்:- முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானம்.

## நிகழ்ச்சி நிரல்

காலை - நிகழ்வு - 8.00மணிக்கு

பொதுச்சுடர் ஏற்றல்
தேசியக்கொடி ஏற்றல்
ஈகச்சுடர் ஏற்றல்
மலர் வணக்கம்

மாலை நிகழ்வுகள் - மாலை 6.30 மணிக்கு

முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகள்
பிரதேச வாழ் மக்களின் கலைநிகழ்வுகள்
மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்வுகள்
விசேட நிகழ்வாக - வவுனியா இசைக்குழுவினர் வழங்கும் "இசை கானங்கள்"

26.11.2003.
காலை நிகழ்வுகள் - 8.00 மணிக்கு

பொதுச்சுடரேற்றல்,
தேசியக்கொடியேற்றல்,
ஈகச்சுடரேற்றல்,
மலர் வணக்கம்.

மாலை நிகழ்வுகள் - 6.30 மணிக்கு

முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை
பிரதேச வாழ் மக்களின் கலைநிகழ்வுகள்
கடற்புலி மகளிர் வழங்கும் "ஏன் இந்த மௌனம்" நாட்டிய நாடகம்

விசேட நிகழ்வாக மன்னார் இசைக்குழுவினர் வழங்கும் "இன்னிசைக்கானங்கள்".

27.11.2003. - மாலை நிகழ்வுகள் - 4.00மணிக்கு

தரையில்:-

கடற்புலிகளின் விசேட படையணிகளின் அணிவகுப்பு இடம்பெறும்.

கடலில் - மாலை 5.00மணிக்கு

விடுதலைப்புலிகளின் கடற்படை சிறப்பு அணியினரின் கடற்கலங்களின் அணிவகுப்பு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து தேசியத்தலைவரின் மாவீரர் தின உரை இடம் பெறும் பின்னர் கடலிலேவிசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் பொதுச் சுடர் ஏற்றல் நிகழ்வு இடம் பெறும்.முல்லை நகரில் மாவீரர் நினைவாக கப்பல் வடிவில் அமைக்கப்பட்ட ஒலி,ஒளிஊட்டப்பட்டு முல்லை கடல் நீரேரியில் விடப்படும். இத்துடன் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட தாக்குதல் வடிவங்கள், ஒளிக்கோபுரங்கள் விசேட வளைவுகள், எழுச்சிக் கொடிகள்,மாவீரர்களின் படங்கள் தாங்கிய விசேட நினைவு மண்டபம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**இவ்வண்ணம்**

**முல்லை/ கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்.**

(3895)




# இரு பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்
# ஈராக்கில் 11 பொலிசார் உட்பட 18 பேர் பலி!

## சரக்கு விமானமும் தாக்கப்பட்டது

ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு வடக்கே நேற்று முன்தினம் இரண்டு பொலிஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 11 பொலிசார் உட்பட குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.


பகூபாவில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற வேளை...

பாக்தாத்திற்கு வடக்கே 65 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பகூபா என்ற பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் நிலையம் முதலாவதாக வெடிமருந்தேற்றப்பட்ட கார் மூலமாக மோதித் தாக்கப்பட்டது. இதில் 6 பொலிசார் கொல்லப்பட்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்று சில நிமிடங்களின் பின்னர் பாக்தாத்திற்கு வடக்கே 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கான்டனிசார் என்ற நெருக்கடி மிக்கபகுதியிலிருந்தபொலிஸ் நிலையம் வெடிமருந்தேற்றப்பட்ட கார் ஒன்றினால் மோதித் தாக்கப்பட்டது. இதில் ஐந்து பொலிசார் உட்பட 12 பேர் கொல்லப்பட்டனர் சம்பவ இடத்தில் உடற்பகுதிகள் சிதறுண்டு காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாக்தாத் விமான நிலையம் நோக்கி வந்த சரக்கு விமானமொன்று நேற்றைய தினம் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகி அவசரஅவசரமாககுறித்த விமான நிலையத்தில் தரையிறங்கியது.

சரக்கு விமானமொன்று ஈராக்கில் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளானமை இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# குண்டுவெடிப்புகளை ஆட்சேபித்து மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

துருக்கி தலைநகர் ஸ்தான் புல்லில் இடம்பெற்றுவரும் தொடர் குண்டு வெடிப்புக்களை ஆட்சேபித்து ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்க ஆயிரக்கணக்கானோர் தலைநகரில் கூடியுள்ளனர்.

தொழில் சங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், ஸ்தான் புல் நகரிலும், வேறு பல முக்கிய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்த மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

அதே நேரம் தற்போது நடைபெறும் போராட்டத்தில் தொழிற் சங்க வாதிகள், குர்திஸ்காரர்கள் இடதுசாரிகள், தமது எதிர்ப்புக் குரலை தெரிவிக்கும் பொது மக்கள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# தமிழக முதல்வர் மீதான ஊழல் வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு இன்று வெளியாகும்!

## ஜெயலலிதா சிறைசெல்லலாம்

**தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீதான டான்சி நிலபேர ஊழல் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை இன்று வழங்கவுள்ளது.**

1992 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது ஜெயலிதா தனது பதவியைப் பயன்படுத்தி அரசுக்குச் சொந்தமான நிலத்தை, தனது தோழி சசிகலாவுடன் பங்குதாரராக வழங்கி யிருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு 1993இல் சுப்பிர மணிய சுவாமி வழக்குத்தொடர்ந்திருந்தார்.

ஆனால் இந்த வழக்கைத் தொடர முடியாது என உச்ச நீதிமன்றம் தடை செய்து விட்டது.

இதனையடுத்து 1996இல் தனி நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்து, மூன்று ஆண்டுகள் விதித்தது. இது தொடர்பான இன்னொரு வழக்கில் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதனையடுத்து 2001இல் சிறைத் தண்டனை முடித்து வெளியே வந்த ஜெயலலிதா அன்றைய சட்டமன்றத்தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சர் ஆனார்.

ஆனால் சிறைத் தண்டனை அனுபவித்த ஒருவர் முதலமைச்சர் ஆகுவது செல்லுபடி ஆகாது என்பதால் இவர் பதவிவிலகிக் கொண்டார். பன்னீர்செல்வம் பதவியேற்றார்.

இதனையடுத்து சென்னை உயர் நீதிமன்றம்ஜெயலலிதா மீதான தனி நீதிமன்ற தீர்ப்பை ரத்துச்செய்தது.

அடுத்து வந்த ஆண்டிபட்டி தேர்தலில் ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆனார்.

ஆனால் நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து சுப்பிரமணிய சுவாமி மீண்டும் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்தத் தீர்ப்பு இதுவரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் இந்த டான்சி வழக்கு மீது இன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

தற்போதைய அரசியல் நிலையில் இந்தத் தீர்ப்பு எப்படி இருக்கும் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய தீர்ப்பு ஜெயலலிதாவுக்குப் பாதகமாக அமையுமானால் அவர் பதவியில் நீடிக்க முடியாது என்பதுடன் சிறை செல்லவும் வேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளார்கள்.

# ஜோர்ஜியா பாராளுமன்றம் எதிர்க்கட்சியின் வசமானது!

ஜோர்ஜியாவின் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அந்நாட்டின் பாராளுமன்றத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இங்கு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற தேர்தலைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களை நடத்திய எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் அந்நாட்டின் பாராளுமன்றத்தைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ஜோர்ஜியாவின் சனாதிபதி பதவிவிலக வேண்டும் அல்லது பாராளுமன்றத்தில் நிர்வாகக் கூட்டம் நடைபெறுவதை நாங்கள் சீர்குலைப்போம் எனக் கூறி ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சி ஆதரவாளர் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.


காஸாவில் இஸ்ரேலிய படையினர் தாக்குதலில் பலியான அகமட் கசப் என்ற ஹமாஸ் தீவிரவாதியொருவரின் சடலத்தை ஏந்தியவாறு கோசமிடும் பலஸ்தீனர்கள்.

# அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மீது வடகொரிய அரசு கடும் விமர்சனம்

## சமாதானப் பேச்சுக்கள் பின்தள்ளப்படலாம்

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட்ரம்ஸ்பீல்ட் குறித்து வடகொரியா கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளது.

ரம்ஸ்பீல்ட் கிட்லரைவிட மோசமானவர் என வட கொரியா தனது விமர்சனத்தில் கூறியுள்ளது. தென்கொரியாவில் அமைந்துள்ள அமெரிக்க விமானப் படைத்தளத்தில் பணியாற்றும் படையினர் மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே டொனால்ட் ரம்ஸ்பீல்ட் வட கொரியாவுக்கு எதிராகக் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார். அத்துடன் வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் குறித்து ஆறு முனை பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ள நிலையில் வடகொரியா ரம்ஸ்பீல்ட் குறித்து விசனத்தை முன் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்கொரியா, சீனா, ஜப்பான், ரஷ்யா மற்றும் வடகொரியாவையும் உள்ளடக்கி வடகொரிய அணுவாயுதத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்களும், இஸ்ரேலியர்களும் இணைந்து சர்வதேச சமாதானத் திட்டத்திற்கு ஆதரவாக மேற்குக் கரையில் கோசமிடுகின்றனர்.

# இந்தியாவிடம் இராணுவ உதவி கோரி நேபாள பிரதமர் புதுடில்லி வருகை!

நேபாளத்தில் மாவோவாத தீவிரவாதிகளின் போராட்டத்தை ஒடுக்குவதற்கென இந்திய இராணுவ உதவிகளைப் பெறும் நோக்கில் நேபாளப் பிரதமர் ஆர்ய பஹதுர்தாபா அடுத்த வாரம் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


வியட்நாம் இளைஞர் ஒருவர் நாய் இறைச்சி விற்பனை படத்தில் காண்க.

இந்தியா செல்லும் இவர் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், இந்திய சனாதிபதி அப்துல் கலாம் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வுள்ளார்.

மாவோவாத தீவிரவாதிகள் இந்திய எல்லைப் பகுதி ஊடாக நேபாளத்திற்குள் ஊடுருவுகின்றனர். அத்தோடு ஆயுதங்களையும் இதே வழியால் கடத்தி வருகின்றனர். இவற்றைத் தடுத்து நிறுத்துமாறு பிரதமர் தாபா இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்திற்கு இராணுவ உபகரணம் வழங்கும் பிரதான நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# மின்வேலி பாதுகாப்பிற்கு நின்ற படையினர் மீது தாக்குதல்

## இரு இஸ்ரேலியர் பலி

ஜெருசலேமிற்கு அண்மையில் இஸ்ரேல் அமைத்து வருகின்ற மின் வேலிக்கு அருகே இரண்டு இஸ்ரேலியப் பாதுகாப்பு வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலியப் பொலிசார் உடனடியாகத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போதிலும் தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இறந்தவர்கள் இருவரும் பாதுகாப்பு வேலி அமைக்கும் சாதனங்களைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டிருந்தவர்களாவர் என இஸ்ரேலியப் பொலிசார் கூறியுள்ளனர்.

இம்மின் வேலி சர்ச்சைக்குரிய வகையில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்வோரைத் தடுப்பதற்காகவே இம் மின்வேலி அமைக்கப்பட்டு வருவதாக இஸ்ரேலியர்கள் தெரிவித்துள்ளனர். 2005ஆம் ஆண்டில் உருவாக்கப்படவுள்ள பலஸ்தீன இராட்சியத்திற்கு ஊடாக இவ்வேலி செல்வதாக பலஸ்தீனர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# குரங்கை மெய்ப்பாது காவலனாகக் கொண்டு உறங்கிய அரசனின் நிலையில் சந்திரிகா

இந்த நாட்களில் நடப்பவைகளைப் பார்க்கும் போது ஆதிகாலத்தில் ஒரு ராஜாவுக்கு நடந்த கதையை இங்கு கூற விரும்புகிறேன். அந்தக் காலத்தில் ஒரு ராஜா நாட்டை ஆண்டு வந்தார். அவர் ஒரு குரங்கை வளர்த்தார் அதற்கு சாப்பாடு உணவு மற்றும் படுக்கைகள் போன்றவற்றை சிறந்த முறையில் செய்து கொடுத்திருக்கின்றார். அவருக்கு அது ஒரு செல்லப் பிராணியாக இருந்தது. அவர் கூறும் வேலைகள் எல்லாம் செய்து கொடுக்கும். உண்மையில் சொல்லப் போனால் அவருக்கு அது ஒரு மெய்க் காப்பாளனாக இருந்து வந்தது. ராஜா செல்லும் இடமெல்லாம் அதுவும் செல்லும். அவரின் படுக்கை அறையில் அது படுத்துக் கொள்ளும். ஒரு நாள் ராஜா தனது படுக்கை அறையில் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தார். அப்பொழுது அவரின் உடம்பில் ஈ ஒன்று வந்து அமர்ந்தது. அந்த ஈயை விரட்டினால் ராஜா எழும்பி விடுவார் என எண்ணியது. இதனால் அது என்ன செய்தது தெரியுமா? ராஜாவின் இடுப்பில் இருந்த அவரின் வாளை ராஜாவுக்குத் தெரியாமல் எடுத்து ஈயை வெட்டியது. ஆனால் ஈ சாகவில்லை ராஜா இறந்து விட்டார். 2001 ஆம் ஆண்டு சந்திரிக்காவுக்கு நடந்த சம்பவமும் இந்த ராஜாவின் கதை தான் நினைவு படுத்துகின்றது.

2001 ஆம் ஆண்டு அப்பொழுது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி.யின் ஒததுளைப்புடன் பிரதம நீதி அரசருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஒன்றை சபாநாயகருக்கு கொடுத்தார்கள். சபாநாயகர். பயந்து அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வில்லை. அப்பொழுது சந்திரிகா அரசாங்கம் பிரதம நீதி அரசரைக் காப்பாற்றுவதற்காகக் அதை நிராகரித்ததோடு ஜே.வி.பி.யுடன்கூட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதுபின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. இவை நாடறிந்த விடையமாகும். பிரதம நீதி அரசரைக் காப்பாற்றப் போய் அரசாங்கத்தைக் கோட்டை விட்டவர் சந்திரிகா அம்மையார்.

இன்றும் அதே சம்பவம் நடந்துள்ளது. அதாவது ஐக்கிய தேசிய முன்னணி பிரதம நீதி அரசருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணைகளைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்த பொழுது பிரதம நீதி அரசரைக் காப்பாற்றுவதற்காக பாராளுமன்றத்தை பின்போட்டு அதி முக்கியம் வாய்ந்த மூன்று அமைச்சுக்களையும் சந்திரிகா தனது வசம் எடுத்துக் கொண்டார். இதனால் 2001 ஆம் ஆண்டு சந்திரிகாவின் அரசு இல்லாமல் போனது போன்று அம்மையார் சனாதிபதி பதவியை இன்று பறி கொடுத்து விடுவாரா? அப்படி நடக்குமானால் அன்று ராஜாவுக்குக் குரங்கினால் நடந்த கதியே இன்று சந்திரிகாவுக்கு நடக்கப் போகிறது. இன்று சந்திரிகாவிற்கு ஆலோசனை கூற பல பண்டிதர்கள் இருக்கின்றார்கள் அப் பண்டிதர்கள் தங்கள் வசம் வாள்களை வைத்துள்ளார்கள். அந்த வாளினால் சந்திரிகவின் மேல் அமர்ந்துள்ள ஈயை விரட்டப் போகின்றனர் இப் பண்டிதர்கள் சந்திரிகாவின் தீர்மானங்கள் யாவும் சரியானவைகளே என்று கூறிவருகின்றனர். ஏன் என்றால் பண்டிதர்களின் அறிவுரையின் படியே சந்திரிகா நடந்து கொள்கிறார். அதன் படி 1988 ஆம் ஆண்டு தாம் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் தனது தாயாரான சிறிமாவோ அம்மையாருக்கு அந்த இடத்தை விட்டுக் கொடுத்து வெளிநாடு சென்று மீண்டும் 1994 ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பி சனாதிபதி தேர்லில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார். சந்திரிகா எடுத்த தனித்தீர்த் மானத்தினால் அந்த வெற்றியை தன் வசம் ஆக்கிக் கொண்டார். பிறகு இந்தப் பண்டிதர்களின் வார்த்தைகளைக் கேட்டபடியால் அவரின் நோக்கங்கள் திசை மாறின. திசைறிமாற்றி விட்டவர்கள் ரணில் விக்கிரம சிங்காவையும் விடுதலைப் புலிகளையும் தமது கைப்பையில் போட்டுக் கொண்டு நடத்துவதற்கு இருந்த பேச்சுவார்த்தைகள் இந்தப் பண்டிதர்களின் ஆலோசனைகளால் கை நழுவிப் போயிற்று. அதாவது வாளினாள் ஈயை வெட்டப் போன கதையாக. மாறிவிட்டது இலங்கை முழுவதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக சந்திரிகா பிரசாரம் மேற்கொண்டு அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளாமல் விடுதலைப் புலிகள் அவரிடம் இருந்து அதிக தூரத்திற்கு தள்ளி வைத்த வர்களும் இந்தப் பண்டிதர்களே யாவார்கள் ரணில் விக்கிரம சிங்காவுக்கும்



விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. நாட்டைக் காட்டிக் கொடுக்கப் போகின்றார் என்று மக்களுக்குப் பிரச்சாரம் செய்து தமிழர்களிடம் இருந்து சந்திரிகாவை பிரித்து வைத்ததும் இந்த பண்டிதர்களே, ரணிலைப் பிரதம பதவியில் அமர்த்தி தேசிய அரசொன்று அமைக்கலாம வட கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கலாம் என்று அறிவுரை கூறிய ஜி.எல். பீரிஸ், மகிந்த ராஜபக்ஷ, ஜெயராஜ் பர்னாந்து பிள்ளை போன்றவர்களில் எஸ்.பி.திசாநாயக்கா ஜி.எல்.பீரிஸ் போன்றவர்களை ரணிலின் மடியில் தள்ளிய பெருமையும் இந்தப் பண்டிதர்களையே சாரும் ஈவூப் ஹக்கீமை பொது ஜன ஐக்கிய முன்னணியிலிருந்து வெளியேற்றியவர்களும் இந்தப் பண்டிதர்களே, பாராளுமன்றத்தை ஒத்தி

லங்காதீப பத்திரிகையில்
உபுல் ஜோசப் பர்னாந்து
மொழியாக்கம் சக்திவேல்

வைத்து மக்கள் தீர்ப்பை பெறுவதற்கு ஜே.வி.பி.யோடு இணைந்து புதிய அரசை ஏற்படுத்தி நாட்டின் அதிகாரத்தைப் பற்றுவதற்கும் அறிவுரை வழங்கியவர்கள் இந்தப் பண்டிதர்களே,

அரசாங்கமும் தோல்வியுற்று தமது அத்தனகல்ல ஆசனமும் தோல்வியுற்று இருந்த வேளையில் ரணிலுடன் சேர்ந்து தேசிய அரசொன்றை அமைப்போம் என்று கூறிய பொழுது தேசிய அரசு என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் எவரும் கூறினால் அவர்களின் தோலை உரிப்பேன் என்று கூறுமாறு சந்திரிகாவுக்கு அறிவுரைகூறியதும் இந்தப் பண்டிதர்களே, இந்தப் பண்டிதர்களின் அறிவுரையால் சந்திரிகாவிடம் இருந்த அரசு பறிபோய் ரணில் நாட்டின் பிரதமருமானார். பலம் வாய்ந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்த பாதுகாப்பு, ஊடகத்துறை, உள்துறை, மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்று மீண்டும் சந்திரிகாவுக்கு அரசு அமைப்பதற்கு அதிக பலம் உள்ளதென்று கூறி, பாராளுமன்றத்தில் அதிக உறுப்பினர்கள் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியிடமிருந்து பறித்துக் கொண்டு அந்த அமைச்சுக்களை மீண்டும் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்று தற்பொழுது அறிவுரைகள் கூறியவர்களும் இந்தப் பண்டிதர்களே.

2001 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியினரால் பிரதம நீதி அரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவந்த பிரேரணையிலிருந்து இன்று அவருக்கு எதிராக பிரே ரணைகள் கொண்டு வரும் வேளையில் பாராளுமன்றை ஒத்தி வைப்பதற்கு அறிவுரைகள் கூறியவர்களும் இந்தப் பண்டிதர்களே, சந்திரிகாவை அழிப்பதற்கு அவரைச் சுற்றி வர வலம் வந்து கொண்டிருக்கும் இந்தப் பண்டிதர்களின் அறிவுரைகளை நினைக்கும் பொழுது அன்று எதிர்க் கட்சியாக இருந்த சிறிமா பண்டாரநாயக்கா அம்மையாரைப் பற்றி அன்றைய சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா சுவாரஸ்யமான கதை நினைவுக்கு வருகின்றது. "சிறிமா அம்மையார் கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும் பொழுது லங்கா சம சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித், தலைவர்களும் கட்சியினுள் அவருக்கு பந்தம் பிடிக்கும் சில தலைவர்களும் சேர்ந்து அவரின் சேலையைத் திருடிக் கொண்டு சென்றுள்ளனர். இதனால் சிறிமா அம்மையார் இப்பொழுது கங்கை நீரில் இருந்து வெளிவராமல் இருக்கின்றார்" என்று ஜே.ஆர்.அப்போது கூறியுள்ளார். ஒரு நாட்டின் தலைவர் பற்றி ஏன் இப்படிக் கூறினார் என்றால், லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி. இவர்களை தமக்கு ஒரு ஆயுதமாக வைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை அழிப்பதற்கு முற்பட்டபொழுது அன்று அவர் நாட்டின் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டார். இதனால் அன்று ஜே.ஆர்.ஜயவர்த்தனா கூறிய கதையாகும்.

1960 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது சிறிமாவோ அம்மையார் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருந்தார். அவரினால் நாட்டுக்குப் பெரிய நன்மைகள் கிடைக்கும் என மக்கள் நம்பியிருந்தனர். அவரின் இந்த நன் மதிப்பைக் கெடுத்தவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாதுகாவலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பரம எதிரியுமான டி.பி.இலங்காரத்தின ஆவார். ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்க வேண்டும் என்றால் இடது சாரிகளாகிய சமசமாஜக் கட்சியையும், கம்யூனிஸ்ட் கட்சியையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைத்துக் கொள்ள வேண்டும் என லங்கரத்னா சிறிமாவுக்கு அறிவுரை வழங்கினார்.

1965 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி அடைந்த பொழுது அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைக்க வேண்டாம் என கூறியது. இலங்கரத்னாவும் இடதுசாரிக் கட்சிகளும் இதனால் அம்மையார் முகத்தில் கரிபூசப் பட்டது. பின் 1970 ஆம் ஆண்டு இடது சாரிகளோடு இணைந்து போட்டியிட்டு வெற்றியீட்டி இரண்டு வருடங்களின் பின் நாட்டில் உள்ள அயல் நாட்டவரின் சொத்துக்கள், மற்றும் உள்நாட்டில் உள்ளவர்களின் சொத்துக்கள் நாட்டுடமையாக்க வேண்டும் என்று அறிவுரை கூறியவர்கள் இலங்கரத்னாவும் இடது சாரிக்கட்சி தலைமைப் பீடங்களும் ஆகும். இவர்களின் ஆலோசனைப்படி சிறிமாவோ அம்மையார் நடந்து கொண்டபடியால் அவரின் பெயரும் அவரது கட்சியும் நாட்டில் இல்லாமல் போயிற்று. இன்று சந்திரிகாவைச் சுற்றியிருக்கும் பண்டிதர்களும் இதனையே செய்து கொண்டு வருகிறார்கள். சனாதிபதி அதிகாரத்தைப் பாவித்து மக்களின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? கடைசி வரை முடியாது. ஆனால் கட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஏன் என்றால் கட்சிக்குத் தலைமைபீடம் ஒன்று தேவை சனாதிபதிக்கு தேவை கட்சியல்ல, கட்சியின் ஆதரவாளர்களும் அல்ல, மக்களின் ஆதரவே முக்கியமானதாகும். 2001 ஆம் ஆண்டு ரணிலுக்கு மக்கள் ஆதரவு அதிகமாக இருந்த படியால் பொது ஜன ஐக்கிய முன்னணி படுதோல்வி அடைந்தது. இரண்டு வருடகாலம் ஆட்சி செய்த ஐக்கிய முன்னணி அரசை சனாதிபதி அதிகாரத்தை பாவித்து கவிழ்ப்பதற்கு செய்த முயற்சி நாட்டின் சமாதானத்துக்கு விழுந்த பேரிடியாகும. இதனால் சந்திரிகா மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார். இதற்கு அறிவுரை கூறியதும் இந்த பண்டிதர்களே, மணிராசகுலம் (குரங்குபாஞ்சான்) விடுதலைப் புலிகளின் முகாம்களை 10 நாட்களில் அகற்ற வேண்டும். என்று பாதுகாப்பு அமைச்சருக்கு சனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார். விடுதலைப் புலிகளை நம்ப முடியாது ஆனபடியால் போர் நிறுத்தக் கண்காணிப்புத் தலைவரை விலக்குவதற்கு உத்தரவுப் பிறப்பித்தார். இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நாட்டிற்கு பெரும் ஆபத்தை உண்டு பன்னப்போகிறது. என்று கூறினார். திருகோணமலை விடுதலைப் புலிகளின் முகாம்கள் அகற்ற வேண்டும் இவைகள் நடைமுறைகளுக்கு வராததால் பாதுகாப்பு அமைச்சை தான் பொறுப் பேற்றுள்ளதாக கூறுகின்றார். இன்று பாதுகாப்பு அமைச்சு பொறுப்புக்களை ஏற்று 10 நாட்கள் கடந்துள்ளன, ஆனால் மணியராசன் குளத்தைப் பற்றி எந்தக் கதையும் கிடையாது. இப்பொழுது சனாதிபதி என்ன கூறப்போகின்றார்? நோர்வே தூதுவர்களுக்கு முழு ஒத்துழைப்பை தருவதாகவும் , கடலில் செல்லும் விடுதலைப் புலிகளின் கப்பலை பார்வையிடுவதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும்,தற்பொழுது விடுதலைப் புலிகள் சமாதானத்திறகு முன் வந்துள்ள படியால் அவர்களை வரவேற்கிறோம், சமாதானம் குழம்பிப் போகக் கூடாது. விடுதலைப் புலிகள் தங்களின் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடைகள் கிடையாது. அவர்கள் சுதந்திரமாக தமது அரசியல் நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம். இவர்கள் எல்லாம் சனாதிபதியின் தற்போதையப் பிரச்சாரங்களாகும். ஆனபடியால் அவர் தற்பொழுது பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை தனது பெட்டகத்தில் போட்டுள்ளார். நாட்டில் பாதுகாப்பு இல்லை நாடு பெரும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளது. என்று கூறிய சந்திரிகா அமைச்சுப் பொறுப்புகளை கையேற்றபின் நாட்டில் பிரச்சினைகள் இல்லாதது போல் செயற் பட்டு வருகின்றார். மீண்டும் பாதுகாப்பு அமைச்சை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு கையளித்ததாலும் அழிக்கா விட்டாலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடையங்களில் செயற்பட முடியுமா? இந்தப் பண்டிதர்கள் தம்வசம் உள்ள வாளினால் சந்திரிகாவை வெட்டுவது மட்டுமல்ல நாட்டில் ஏற்படப் போகும் சமாதானத்தையே வெட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பண்டிதர்களின் அறிவுரைகளால் தற்பொழுது சனாதிபதி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது இந்தப் பண்டிதர்கள் ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து பொது ஜன ஐக்கிய முன்னணிக்குள் எதிர் கட்சி ஒன்றை ஏற்படுத்தப் போகின்றார்கள். இதனால் இந்தப் பண்டிதர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தற்பொழுது பிராணவாயுவை கொடுத்துக் கொண்டு வருகின்றனர். இப்பொழுது சந்திரிகா இந்தப் பண்டிதர்களிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றிக் கொள்வது அவசியமாகும். இல்லையேல் கட்சியும் இல்லை சந்திரிகாவும் இல்லை.

# தமிழீழ மாவீரர் நாளையொட்டி பிரதேச ரீதியாக மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றது.

கிளி பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னதாக நேற்றுக் காலை 10.15 மணிக்கு குருகுலம் சிறுவர் இல்ல வளாகத்திலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மங்கல வாத்திய இசை முன்னகர அதனைத் தொடர்ந்து கனகபுரம் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை தொடர ஊர்வலமாக இந்துக்கல்லூரி வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றி வைக்க. தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளி.பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் நிருபன் தலைமையில் நடைபெற்றது.

மாவீரர் பொதுச் சுடரினை கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றி வைக்க மாவீரர் திருவுருவப்படத்திற்கு கல்லூரி அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரன் மலர்மாலை அணிவித்தார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் கிளி. அரச அதிபர் ஆகியோர் நினைவுரை வழங்கியதையடுத்து மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிய போசனம் வழங்கி கௌரவிக்கப் பெற்றது.

வவுனியா புதுக்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

காலை 10 மணிக்கு புதுக்குளம் பாடசாலையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரினை அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.கே. செந்தில்நாதன், ஏற்பாட்டுக் குழுத்தலைவர் ஞானப்பிரகாசம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை மாவீரரின் தந்தை தனபாலசிங்கம் ஏற்றினார். பொது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார், ஈகச்சுடரினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஏற்றினார்.

வரவேற்பு உரையினை தரணிக்குளம் அரசியல் பொறுப்பாளர் அழகரசன் வழங்கினார். நினைவுரைகளினை தமிழினி,எழிலன் ஆகியோர் வழங்கினர். நன்றி உரையினை கொள்கைமுன்னெடுப்பு பொறுப்பாளர் சிறீநாத் வழங்கினார். இதன்பின்னர், மாவீரர்களின் பெற்றோருக்கு மதியபோசனம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

வட்டக்கச்சிப்பிரதேசத்திற்கு உட்பட்ட அனைத்து வலயங்களைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11.15 மணியளவில் ஆரம்பமானது.

இராமநாதபுரம் சந்தியில் இருந்து மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் மாவீரர்களின் பெற்றோர் அழைத்துவரப்பட்டு பொதுச் சுடரினை கிளி.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழிஏற்றி வைத்தார். அகவணக்கத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. அனைத்து மாவீரர்களுக்கான பொதுச்சுடரினை இராமநாதபுரம் ம.வி. அதிபர் இரத்தினகுமார் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை கரைச்சி கிழக்கு பல நோ.கூ. சங்கத்தலைவர் தர்மசூரியர் அணிவித்தார் தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.

வட்டச்சக்சிப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர், வேழினி தலைமை உரையினை வழங்க சிறப்பு உரையினை தமிழ் பாட உதவி கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், தமிழீழ மகளிர் அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொன்னுத்துரை மாவீரர்பெற்றோர் சார்பில் நடேசன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றது. நன்றிஉரையுடன் மாவீரர் களின் பெற்றார்களிந்தான மதிய போசனம் வழங்கப்பட்டு நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நிறைவு பெற்றது.

மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் துணுக்காய் அரசியல்துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா தலைமையில் நடைபெற்றது. மாவீரர்களின் பெற்றோர்கள் மல்லாவி ஆலடிச் சந்தியில் இருந்து மல்லாவி மத்தியகல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் மத்திய கல்லூரியின் மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். இதில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மாலதிபடையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா ஏற்றினார். மாவீரர் பொதுகல்லறைக்கான ஈகச்சுடரினை மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் திருமதி கோகிலா வாணி - தேவராசா ஏற்றி வைத்தார். அதற்கான மலர்மாலையினை மல்லாவிப் பிரதேச புலனாய்வுத்துறை பொறுப்பாளர் விகடன் மாஸ்டர் அணிவித்தார். மலர் வணக்கத்தை மாவீரர் யசோவின் தந்தையார் ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கு மதியபோசன உணவு வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் ம.அன்பரசனும் மாலதிப் படையணி சிறப்புத்தளபதி விதுஷாவும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் துணுக்காய் காவல்பணி மனைப் பொறுப்பாளர் தி.பகீரதன் தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் போராளிகள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டு மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவித்தனர்.

மல்லாவி பாலிநகர் பாடசாலை மண்டபத்தில் பாண்டியன்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பொதுச் சுடரினை மாந்தை கிழக்கு பிரதேச உதவி அரசாங்க அதிபர் ஜெறோம் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் பொதுக் கல்லறைக்கு ஈகச்சுடரினை முல்லை மாவட்ட மாவீரர் போராளிகள் குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் பாண்டியன் ஏற்றி வைத்தார். அதற்கான மலர் மாலையினை பாலிநகர் மகா.வி அதிபர் சுந்தரமூர்த்தி ஏற்றிவைத்தார். சிறப்பு உரையினை பாண்டியன்குளம் பிரதேச வெகுசன ஒன்றியத் தலைவர் தனிநாயகம் பாண்டியன்குளம் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சண்முகலிங்கம் உதவி அரச அதிபர் ஜெறோமும் சோதியா படையணியைச் சேர்ந்த போராளி மஞ்சரியும் நிகழ்த்தினர் தொடர்ந்து மாவீரர் பெற்றோர்களுக்கான மதிய உணவுவழங்கி கௌரவிக்கப்பட்டது. (சோ.21. 24.12)



கிளி.இந்துக்கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில்....

# தமிழீழ மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாட அனைவரும் அணிதிரள்க

## வடமராட்சி மாதர் அபிவிருத்திச் சங்கம் அழைப்பு

(வடமராட்சி)

படைத்தரப்பின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமிழீழ மாவீரர் நாளினை தமிழினம் உணர்வு பூர்வமாகஎழுச்சியுடன்கொண்டாட அனைவரையும் அணிதிரளுமாறு மாதர் அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரமொன்றை வடமராட்சி பிரதேச மாதர் அபிவிருத்திச் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் "எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் காலம் காலமாக எமது இதயக் கோவிலில் வைத்து பூசிக்கப்படவேண்டியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமது இன்னுயிரை ஈந்து தமிழீழ விடுதலைப்போருக்கு வீறு சோத்த மாவீரர்கள் அவர்களின் தலை முறையிலேயே போற்றப்படவேண்டும் அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ் செயல்களும்மக்களிடம் எடுத்துச் சொல்லப் படவேண்டும்.

இவற்றைக்கருத்தில்க் கொண்டே தமிழீழ மாவீரர் தினத்தை எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்க குடாநாட்டு மக்களை அணிதிரளுமாறு இம் மாதர்அமைப்பு அறை கூவல் விடுத்துள்ளது. (27)

# விவசாய நடவடிக்கைக்கென 65 பயனாளிகளிற்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

யு.என்.எச்.சி.ஆர் நிறுவன நிதி உதவியுடன் போரூட் நிறுவன வன்னி அபிவிருத்தித்திட்டத்தினூடாக கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் உருத்திரபுரம் வடக்கு கிராமத்தில் 65 நெற்செய்கைப் பயனாளிகளிற்கு தலா ஒன்றரை ஏக்கரில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்றதான விதை உள்ளீடுகள் வழங்கல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்திட்டத்தின் அடிப்படையில் கிளி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தினால் மலையாளபுரக்கிராமத்தில் 25 பயனாளிகளிற்கு நெற்செய்கைக்கான விதை உள்ளீடுகள் வழங்கப் பெற்றன. (சோ)

## -அரச ஒப்பந்தங்களில்

# குறைந்தது 35 சதவீதம் தரகுப்பணமாகச் செல்கிறது

(கொழும்பு)

அரசாங்க ஒப்பந்தங்களுக்கான மொத்த செலவீனங்களில் ஆகக் குறைந்தது 35சதவீதமான தேனும் தரகுப்பணமாக வழங்கப்படுகிறது என்று சிறிலங்காவின் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால் அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பயன்களைப் பெறமுடியாது என்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பியசேன ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைக்குப் பரிகாரம் காணப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உயர் அரசாங்க அதிகாரிகளுக்கென நடத்தப் பட்ட கருத் தரங்கொன்றில் உரையாற்றிய அவர், அரசியல் வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஒப்பந்தக் காரர்களிடமிருந்து லஞ்சம் வாங்குகின்றார்கள். அநேகமாக 60 சதவீதமான அரசாங்க உத்தியோ கத்தர்கள் இத்தகைய குற்றச் செயல்களைச் செய்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

# மீன் விற்பனைப் பகுதிக்கு கட்டடம் அமைக்க முடிவு

(மல்லாவி)

மல்லாவி பொதுச் சந்தையில் மீன் விற்பனைப் பகுதிக்கான புதிய கட்டடம் அமைக்க துணுக்காய்ப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த புதனன்று தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் க.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் துணுக்காய்ப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி. தமிழ்ச்செல்வன் கோமளவள்ளி அடிக்கல்லை நாட்டி வைத்தார். (24)

## - பரு.கற்கோவளப் பகுதியில் -

# மிதிவெடிகளை அகற்றுவதற்கு படையினர் தொடர்ந்தும் தடை!

படையினரின் வாக்குறுதியை நம்பி மிதிவெடியகற்றும் செயற்பாட்டிற்காக கற்கோ வளப் பகுதிக்குச் சென்ற டென்மார்க் மிதிவெடி அகற்றும் குழுவினர் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர். கடந்த 9ஆம் திகதி பருத்தித்துறை கற்கோவளப் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட பிரதேசத்தில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த டென்மார்க்கைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் குழுவினரை அவர்களின் பணியைத் தொடரவிடாது படையினர் தடுத்தனர்.

இவ்வாறான செயற்பாடு தம் மீள் குடியமர்வைப் பாதிக்கும் என படையினரின் செயற்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் ஏற்பட்ட மக்கள்-படையினருக்கிடையிலான முறுகல் நிலையைத் தொடர்ந்து படையினருடன் பேச்சுக்களை நடத்திய டென்மார்க் மிதிவெடியகற்றும் குழுவினருக்கு ஒருவாரத்தின் பின் மிதிவெடி அகற்றலாம் என கடந்த 10ஆம் திகதி படையினரால் வழங்கப்பட்ட வாக்குறுதியை நம்பி கடந்த வெள்ளியன்றுஅங்கு மிதிவெடியகற்றும் செயற்பாட்டிற்காகச் சென்ற இக்குழுவினரை மிதிவெடி அகற்ற அனுமதிக்காத படையினர் அவர்களைத் திருப்பியனுப்பினர். (33)

## பிற்போடல்

வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தினரால் நாளை 25ஆம் திகதியன்று ப.தெ. வ.அ.கூ.சங்கங்களின் தலைவர் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் தவிர்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். கலந்துரையாடல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சங்க முகாமையாளர் வே.சுப்பிர மணியம் தெரிவித்துள்ளார். (சோ)

## - காரைநகர் ஊர்காவற்றுறைப் படகுச் சேவை

# மீனவர்கள் நடாத்துவதற்கு கடற்படை அனுமதி மறுப்பு!

ஊர்காவற்றுறை மற்றும் கரைநகருக்கும் இடையிலான படகுச் சேவையை மீனவர்கள் நடத்த கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

நீண்ட காலமாக இப் படகுச் சேவையை நடத்தி பணம் வசூலித்துவரும் படையினர் மக்களின் இலகுவான போக்குவரவுக்காக நடத்தப்படும் இப்படகுச் சேவையை சீரான முறையில் நடாத்தாததனால், ஏற்படும் பயண தாமதங்களை தவிர்க்கவும் இப்படகு ஓட்டும் தொழிலை நம்பியே சீவியம் நடத்தும் மீனவக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தல் பொருட்டும் இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தால் காரைநகர் கடற்படைத் தலைமையகத்திடம் இப்படகுச்சேவையை மீனவர்களிடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் படையினர் இம் மறுப்பைத் தெரிவித்துள்ளனர். (33)

-இனப்பிரச்சினை தீர்வாக ஐக்கிய இலங்கைக்குள்-

# 9சமஷ்டி அதிகார அலகுகளை உருவாக்க முஸ். புத்திஜீவிகள் சமூகம் சிபார்சு

(கொழும்பு)

**ஐக்கிய இலங்கைக்குள் ஒன்பது சமஷ்டிஅதிகார பகிர்விலான ஆட்சிகளை உருவாக்க வேண்டுமென முஸ்லிம் புத்தி ஜீவிகள் சமூகம் கோரிக்கை விடுக்கவுள்ளது.**

சமாதானப் பேச்சுவார்த்தையும், புத்தளம் முஸ்லிம்களின் நிலைப பாடு என்னும் தலைப்பிலான கருத்துக்களம் நிகழ்வொன்று நேற்று முன்தினம் மாலை புத்தளம் இபுனுயதூதா மண்டபத்தில் நடை பெற்றது.தற்போதைய இனப் பிரச்சி னைக்கு தீர்வாக சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்வதாக இதில் கருத்து தெரிவித்து முஸ்லிம் புத்தி ஜீவிகள் சமூகம் இந்தத் தீர்வின் மூலம் சகல சமூகங்களும் சம மான உரிமைகளை அனுபவிப் பதை உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டது.

அதற்காக சகல சமூகங்க ளினதும் நிதானப் போக்குடை யவர்களால் தயாரிக்கப்படுகின்ற தீர்வை அரசியல் சாசனத்தில் உள் வாங்கு மாறு அரசை வலி யுறுத்தவுள்ளதாக இந்தக் கூட்டத் தில் வலியுறுத்தப்பட்டது.

பெரும்பான்மை சமூகங்களைக் கொண்ட பிரதேசங்களில் அல்லது மாகாணங்களில் அந்தந்த சமூகத்தின் கீழான சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்துவதன் மூலம் ஏனைய சமூகங்களின் விகிதா சாரத்திற்கமைய அவர்களது வளங் கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சமஷ்டி முறையின் படி தமிழ்,முஸ்லிம் சமூகம் 2 சமஷ்டி ஆட்சியையும், வடக்கு கிழக்கு தவிர்ந்த தென்னிலங்கையில் 7மாகாணங்களிலும் பெரும்பான்மை சமூகம் சமஷ்டி ஆட்சியும் அதில் வாழும் சிறுபான்மை சமூகம் விகி தாசார பகிர்வில் நன்மை யடையும்எனவும் சுட்டிக்காட்டப் பட்டது. அதே போல், மாகாண சமஷ்டி ஆட்சியில் 2 சபைகள் அமைக்கப்படுவதுடன் அதிலொரு சபையாக சகல இனங்களையும் கொண்ட பிரதிநிதிகள் விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமெனவும் சமர்ப்பிக்கப் படவுள்ள புத்திஜீவிகளின் நகல்த் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (27)

# மூடப்பட்ட கொழு. பல்கலைக்கழக கலைப்பீடத்தை மீண்டும் திறக்குக!

-பேரணி நடத்த மாணவர்கள் சங்கம் முடிவு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக கலைப் பீடத்தில் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு மாணவர் கள் பல்கலைக்கழக அதிகாரி களிடம் வலியுறுத்தியுள்ளார்கள்.

விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாகவும் நிதித்தட்டுப்பாடு காரணமாகவும் கலைப்பீடம் இந்த மாதம் 17ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டுள்ளது என்று ஐக்கிய மாணவர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

கலைப்பீடத்தை மீண்டும் திறக் குமாறு அதிகாரிகளை வற்புறுத்து வதற்கான ஆர்ப்பாட்டப் பேரணி யொன்று இன்று நடாத்த மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

# மழை நீர் உட்புகுவதால் நோயாளர் விடுதியில் அவலம்!

(மல்லாவி)

மல்லாவி வைத்திய சாலை நோயாளர் தங்கு விடுதியின் கூரை சிறற்று காணப்படுகின்றமையால் மழை நீர் உட்புகுவதால் பெரும் அசௌகரியம் எதிர் நோக்கப்படு கின்றது.

நோயளர் தங்கும் விடுதிகான மருந்துப்பொருட்கள்சேமித்து வைக் கும் அறைமற்றும் தாதிமார் தங்கும் அறை என்பன மழைநீர் உட்புகு வதால் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நோயாளர் தங்கு விடு தியில் உள்ள முட்பதுகட்டில்கள் மழை நீரினால் நனைந்து போகின் றன. இவற்றால் நோயாளர்முதல் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் வரை பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த நோயாளர் விடுதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப் பார்களா என நோயாளர்கள் ஏங்கு கின்றனர். (24)

# கொழும்புத் துறைப் பகுதியில் உரிமட்டை ஊறவிட தடை!

கொழும்பு துறைப்பகுதியில் கடற்கரைகளில் தங்கியுள்ள படை யினர்கள் தம் பாதுகாப்பு நிலை களுக்கு அண்மையாக தென்னம் உரிமட்டைகளை ஊறவிடக் கூடாது என அறிவித்தல் விடுத் துள்ளனர்.

மேற்படி பிரதேச வாழ் மக்களில் பெருமளவானோர் தும்புக் கைத் தொழிலூடனான வருமானத்தை நம்பியே வாழ்க்கை நடாத்தி வருவதானால் தமது தும்பு உற்பத்திக்கு தேவை யான தேங்காய் உரிமட்டைகளை தமது குடியிருப்புக்கு அண்மையாக உள்ள கடல் நீரில் ஊறவிடுவது வழக்கம்.ஆனால் கடந்த 3 நாட்களுக்கு முன்பு இப்பகுதி கடல் கரையால் உரிமட்டைகளை ஊறவிடும் நடவ டிக்கையில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தவர்களை தமது பாதுகாப்பு அரணில் இருந்து 500 மீற்றர் தூரத் துக்கு அப்பா லேயேஇவை ஊறவிடப்பட வேண் டும் எனவும் மீறி தம் அரண்களை அண்மித்து உரிமட் டைகளை ஊறவிட விடுவோரின் தும்பு உற்பத் திகள் பறிமுதல் செய் யப்படும் எனப்படையினர்தெரிவித்தனர். 33)


## முக்கிய அறிவிப்பு

ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் நிறுவனத்தில் (தென்றல் கடை) 01-06-2003 இற்கு முன்பு திருத்தக் கொடுத்த இலத்திரனியல் பொருட்கள், மணிக்கூடுகள் என்பனவற்றை மீளப் பெறாதவர்கள் எதிர்வரும் 20-12-2003இற்குள் உரிய ஆவணத்துடன் சமுகம் தந்து அப்பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேற்குறித்த திகதிக்குள் மீளப் பெறப்படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்

நிர்வாகம்.

(3733)


## ஓராண்டு நினைவஞ்சலி



திதி 24.11.2003

அமரர். உயர்திரு.

**கார்த்திகேசு இளையதம்பி**

அவர்கள் (யாழ். நெடுந்தீவு)

ஜனனம்:- 24 . 06 . 1924
மரணம்:-- 15 . 12 . 2002

இலைத்தின் ஒளியாய் வாழ்ந்து
வையத்துள் வாழ்வாங்கு - வாழ
வழி சொன்ன அறிவின் உறைவிடமே.
அருள் நெஞ்சம் கொண்ட
அன்பின் திருவுருவே.
எம்மை எல்லாம் இன்பமாக வாழவைத்து
உலகம் போற்ற வாழ்ந்திட்ட உத்தமனே - நீர்
பிரிந்து ஓராண்டு சென்றாலும்,
பிரியவில்லை உம் நினைவு.

இல.677/ஆம் யூனிற், இராமநாதபுரம்

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (3885)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 1981 * 11 * 08



இறைவன் அடியில் 2003 * 10 * 26

செல்வி
அலோசியஸ் -அஜந்தா (ரோகினா)

26.10.2003 அன்று, மரணமடைந்த, எமது தங்கையின், மரணச் செய்திகேட்டு உடன்வந்து உதவிபுரிந்தோர் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார்,உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் நன்றியைத், தெரிவித்துக்கொள்கின்றோம்.


உமதுபிரிவால் வாடும்

நி.முகவரி,
கொக்கிளாய்,
கோயிற்குடியிருப்பு.
முல்லைத்தீவு

குடும்பத்தினர்,
உறவினர்,
நண்பர்கள்.

(3889)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
27-06-1974

24-11-1999
வீரச்சாவு

கடற்புலி

**லெப்.கேணல் ஜோன்சன் / இளங்கதிர்**

(துவசி இந்திரதேவன்)

(சம்பூர், திருமலை.

(சம்பவம் தமிழீழ கடற்பரப்பில்-
-இலங்கை கடற்படையினருடனான மோதலில்)

ஓயாத அலைகள் ஆழகடலில் பாய்ந்த
ஒன்னவர் படையைச்சாடி
மாசறுதல் வீரச் சாவில்
மறைந்தவன் ஜோன்சன் வாழி.

தேசமது களங்கம் நீக்கும்
சினத்துடன் எழுந்த வீரன்
வீசுகின்ற புயலாய் மோதி
வெம்பகை முடிக்க நின்றான்

(3734)

குடும்பத்தினர்.



## சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 24-11-2003

# தற்பொழுது மட்டும் ஏன்?

யாழ்.குடாநாட்டில் மாவீரர்நாள் நிகழ்வுகளுக்கு சிறிலங்கா இராணுவத்தரப்பு இடையூறுகளை மேற்கொண்டு வருகின்றது. இவை திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் இடையூறுகள் என்பதும், புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு மாறானது என்பதும் வெளிப்படையானது.

ஏனெனில், புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் முதலாவது மாவீரர்தின நிகழ்வு அல்ல இது. கடந்த ஆண்டும் மாவீரர் தின நிகழ்வுகள் யாழ்.குடா நாட்டில் நடைபெற்றது. தற்பொழுது படைத்தரப்பு ஆட்சேபிக்கும் விடயங்கள் - நிகழ்வுகள் யாவும் இடம்பெற்றே இருந்தன.

அவ்வாறானால் இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகள் தொடர்பான மக்களின் நடவடிக்கைகளுக்கு படைத்தரப்பு இடையூறுகளை விளைவிப்பதேன்? அதாவது வீதிவளைவுகளும், அலங்காரங்களும் படைத்தரப்பிற்கு புதிய இடையூறுகளாக எவ்வாறு மாறின? மக்களின் எழுச்சி நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கவும், மக்களை அச்சுறுத்தவும் படைத்தரப்பு முற்பட்டுள்ளது ஏன்?

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின் கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டவை தற்பொழுது அனுமதிக்கப்படாமைக்கு காரணம் புரிந்துணர்வு உடன்பாடு காலாவதியாகிப்போய் விட்டதா? அன்றிக் கைவிடப்பட்டுவிட்டதா? அல்லது உடன்பாட்டில் மாற்றம் இடம்பெற்றுள்ளதா? நாம் அறிந்தவரை அவ்வாறு எதுவுமில்லை. அவ்வாறு நடந்துள்ளதாக சனாதிபதியோ அன்றிப் பிரதமரோ கூடக் கூறவும் இல்லை.

அவ்வாறானால் நடந்ததென்ன? தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை மாற்றம் மட்டுமே. அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பைப் பறித்தெடுத்துக் கொண்டமையால் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடியே. வேறு விதமாகக் கூறுவதானால் சனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்கள் சென்றடைந்துள்ளமையே.

"யாழ்.குடா நாட்டில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. அரசியல் நோக்கம் கொண்ட மாவீரர் நாள் நிகழ்வுகளை நடாத்தப் படையினர் ஒத்துழைப்பு நல்குவர்" என இராணுவப் பேச்சாளர் தெரிவிக்கின்ற போதும், இராணுவத்தரப்பு மாவீரர்தின நிகழ்வுகளுக்கு இடையூறுகளை விளைவிப்பதானது எதன் அடிப்படையிலானது? பாதுகாப்பு அமைச்சு சமாதானத்திற்கு விரோதமான சக்தியின் கைகளில் போய்ச் சேர்ந்துள்ளது என்ற உணர்வு இராணுவத்தரப்பில் உருவாகியுள்ளமையினாலா?

சனாதிபதி சந்திரிகா, "நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாகக்" கூறிக்கொண்டாலும் அவரின் நடவடிக்கைகள் சமாதானம் நோக்கியவை என்று எவருமே நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அவரின் செயல்முறைகள் அவ்வாறானவையாக இல்லை. ஆகையினால், அவரின் அழைப்புகளுக்கு எவரும் செவிசாய்ப்பதாகவும் இல்லை.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகக் கூறிக்கொண்டே அமைச்சுக்களைப் பறித்த சனாதிபதி சந்திரிகா - விடுதலைப்புலிகளுக்கு அளவிற்கு மீறியதான விட்டுக்கொடுப்புக்களை ரணில் அரசாங்கம் மேற்கொண்டுவிட்டதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கப் போவதாகக் கூறும் அவர், விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் பலப்பட்டு வருவதாகவும், யுத்தத்திற்குத் தயாராகி வருவதாகவும் உண்மைக்கு மாறான வகையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியும் வருகின்றார்.

இத்தகையதொரு நிலையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றபின்னர் இடம்பெறும் மாவீரர்நாள் நிகழ்வுகளுக்குப் படையினர் போடும் முட்டுக்கட்டையானது எந்தவகையில் பார்க்கப்படக்கூடியது? விடுதலைப்புலிகளுக்கு ரணில் அரசாங்கம் வழங்கிவிட்டதாகக் கூறும் அதிக அளவிலான விட்டுக்கொடுப்புக்களுக்குத் தடைவிதிக்கும் நோக்கத்திலானதா? அன்றிப் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயம் என்ற ரீதியில் அடங்குகின்றதா? அதுவும் அன்றேல் தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிப்பதாகவுள்ளது என இராணுவத்தரப்புக் கூறும் தமிழ் மக்கள் மீதான கரிசனையின் பாற்பட்டதா?

இதில், தமிழ் மக்களினாலேயே இவை மேற்கொள்ளப்படுவதினால், தமிழ் மக்களுக்கு இடையூறு என்பது, ஏற்றுக்கொள்வதற்கில்லை. புரிந்துணர்வு உடன்பாடு மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை மேற்கொள்வதற்கும், விடுதலைப்புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியற் பணிகளை மேற்கொள்கொள்வதற்கும் வழிவகை செய்வதினால் அதற்கும் மாறானதில்லை. அவ்வாறானால் விடுதலைப்புலிகளுக்கு, ரணில் அரசாங்கம் அளவிற்கதிகமாகச் செய்துவிட்டதாகச் சனாதிபதி சந்திரிகா கூறும் விட்டுக்கொடுப்பைச் சீர்செய்வதற்காகவே இத்தகைய செயற்பாடுகள் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டிருத்தல் முடியும்.

ஆகையினால், பாதுகாப்பு அமைச்சின் இந் நடவடிக்கையானது, எந்தவகையில் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதாக இருக்க முடியும்? படையினர் - தமிழ் மக்கள் மத்தியில் முறுகல் நிலையைத் தோற்றுவிக்கத்தக்க இந் நடவடிக்கைகள் எந்த வகையில் சந்திரிகாவின் கூற்றுக்களுக்கு அனுசரணையானவையாக இருக்க முடியும்? சனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்காது இருப்பின் இத்தகையதொரு சூழல் தற்பொழுது ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா?

# தமிழீழ மாவீரர் நாள் - 2003

## தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்

### மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்

01.பொதுச்சுடரேற்றல்
02.தேசியக் கொடியேற்றல்.
03.ஈகச்சுடர் ஏற்றல்.
(திருவுருவப்படம்)
04.மலர் வணக்கம்
05.அகவணக்கம்
06.உறுதியுரை எடுத்தல்.
07.நினைவுரை.

என்பன வரிசை ஒழுங்கில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப நிகழ்வுகள் மாவீரர் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடைபெறும்.

தேசிய கொடியேற்றல்.

மாவீரர் எழுச்சிநாட்களுக்கான நிகழ்வுகள் நவம்பர் 25ஆம் நாளன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். மாவீரர் துயிலும் இல்லங்களில் 25ஆம் நாள் காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி, நவம்பர் 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்தபின் இறக்கப்படும். இயக்கப் பணி மனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00மணிக்கு கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலை ஏற்றப்படும். நவம்பர் 27ம் நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

பொது நிறுவனங்களிலும், பள்ளிகளிலும் ஒவ்வொரு நாளும் பணிமுடிந்த பின் பகல் 12.01இன் பின்பாகவும், மாலை 6.00மணிக்கு முன்பாகவும் தேசியக்கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலையில் ஏற்றப்பட வேண்டும். தேசியக் கொடியேற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக்கங்கள் தேசியக்கொடி பயன்பாட்டு விதிக்கோவை என்னும் நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மாவீரர் பணிமனை.

# சட்டவிரோதமாக கடத்திவரப்பட்ட மருந்துப்பொருட்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து சட்டவிரோதமாக கடத்திவரப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

கொழும்பு கிராண்பாஸ் பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரினால் 'பிலாஸ்டர் ஒவ் பரிஸ்' தூள் இறக்குமதி செய்யப்பட்டிருந்த கொள்கலன் பெட்டியொன்றிலேயே இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு ஊறு கொடவத்தையிலுள்ள சுங்கத் திணைக்களக் கொள்கலன் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கொள்கலனை சோதனைக்குட்படுத்தியபோதே கடந்த வியாழக்கிழமை இந்த சட்டவிரோத மருந்துப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதில் குடும்பக் கட்டுப்பாட்டுக் குளிசை - 10 ஆயிரம், நீரிழிவு குளிசை - 20ஆயிரம், தலைவலிபோக்கும் குளிசை - 10 ஆயிரம், உடல்நோவுக்கான திடீர் நிவாரண ஸ்பிரேடின்கள் - 400 என்பன இருந்துள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட மருந்துப் பொருட்களை சட்டவிரோதமாகக் கொண்டு வந்த வர்த்தகரைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் அவற்றைப் பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப் போவதாக சுங்கத்திணைக்கள அதிகாரி பெனட் ரத்நாயக்க கூறியுள்ளார்.

# மாவீரர் நினைவு பதாகையோடு சென்ற பார ஊர்தி தடுப்பு

## -சாரதி அச்சுறுத்தப்பட்டார்

மாவீரர் தின நினைவுப் பதாகை கட்டிச் சென்ற பார ஊர்தி ஒன்று படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் அதன் சாரதியும் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார்.

கைதடிச் சந்திப் பகுதியில் நேற்று நடைபெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தென்மராட்சிப் பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மேற்படி பார ஊர்தியில் மாவீரர் எழுச்சி நாள் பதாகை கட்டப்பட்டிருந்ததனால் கைதடிச் சந்தியில் வைத்து வழிமறித்த படையினர் அப்பதாகையைத் தாமாகவே அறுத்து எறிந்ததுடன் கடுமையாக மிரட்டி சாரதியின் அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கம் என்பவற்றைப் பதிவு செய்து எச்சரித்து அனுப்பியுள்ளனர். (33)


## சிறிலங்கா கட்டுப்பாட்டுச்சபை

# முல்லை,கிளி. மாவட்டங்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள் அன்பளிப்பு

கிளி/முல்லை மாவட்டங்களுக்கு சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தமிழீழ விளையாட்டுத்துறை யூடாக 240,000 ரூபா பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கியுள்ளது. இவ் உபகரணங்களை முல்லைத்தீவு மாவட்டத்தின் சார்பில் திரு. சிவனடியாரும், கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் வைத்திய கலாநிதி யூடி ஜெயக்குமார் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் கழகங்களுக்கிடையேயான சுற்றுப்போட்டி ஒன்றும், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையே 14,16 வயதுப் பிரிவினர்களுக்கான மென்பந்துப் போட்டிகளும் நடாத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பயிற்சி ஆடுகளங்கள் இரண்டு அமைத்துக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் இதன் மூலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறும் மூன்றாவது தமிழீழத் தேசிய பெருவிளையாட்டுப் போட்டியில் சிறப்பான அணிகளைத் தெரிவுசெய்ய வேண்டும் எனவும் தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.




## -மாவட்ட ரீதியாகப் பெரும்போட்டிகள்-

# மாவீரர் வெற்றிக் கேடய உதைபந்தாட்டப் போட்டிகள்

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவட்ட ரீதியாக மாவீரர் வெற்றிக் கேடயப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் ஏற்பாட்டில் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இது ஐம்பதுக்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றும் மாபெரும் போட்டியாக நடைபெறுகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டத்திற்கான போட்டிகள் மாந்தை பேறுகு மடுப்பிரதேசத்தில் நேற்று ஆரம்பமாகி இன்று வரை நடைபெறும் என மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கலியமுகன் ரஜிதன் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

இதே போன்று வவுனியா மாவட்டத்திற்கான போட்டிகள் நேற்று முன்தினம் வவுனியா நகர மைதானத்தில் ஆரம்பித்துள்ளது என வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ருதன் தெரிவித்துள்ளார். வவுனியா உதைபந்தாட்ட லீக் இதற்கான உதவிகளை வழங்கவுள்ளது.

# மாவீரர் தினத்தைக் குழப்பும் படையினரின் முயற்சிக்கு ச.த. மாணவர் பேரவை கண்டனம்

எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர்தின விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக குடாநாட்டு மக்கள் தயாராகி வருகின்ற இவ்வேளையில் அதனைக் குழப்பும் முயற்சியில் சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் மிக வேகமாக செயற்பட்டு வருகின்றனர் என சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடாநாட்டில் பல பாகங்களிலும் மக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் அலங்காரங்களை அறுத்து, அழித்துவரும் படையினர் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவை அகற்ற முற்பட்டபோது மாணவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. இறுதியில் இராணுவ ரக் வண்டியினால் வேகமாக மோதி அந்த வளைவை சாய்த்து வீழ்த்தினர். உலகில் யுத்தத்தில் மடிந்தவர்களுக்கு நினைவுக்கல் அமைப்பதும், அவர்களை நினைவு கூருவதும் மதிப்பளிப்பதும் சர்வதேச யுத்த மரபாகும். அதனை உலகிலுள்ள இராணுவங்கள் மதித்தே நடக்கின்றன. ஆனால், சிறிலங்கா இராணுவம் தனது இனவெறி மேலாதிக்கத்தினால் மாவீரர்களின் கல்லறைகளை இடித்து அழித்தது மட்டுமன்றி அவர்களை நினைவு கூரும் செயற்பாடுகளையும் முற்றாகத் தடை செய்யும் கீழ்த்தரமானத் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டமோ நடைமுறையில் இல்லாத வேளையில் நாட்டின் சட்டத்தையும் மீறி படை யினர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது படையினரின் கொலை வெறி, இனவெறிக் காடைத்தனத்தை துல்லியமாக வெளிப்படுத்துகின்றது. அது மட்டுமன்றி சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொலிசாரே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் எமது அலுவலகத்தினுள் எந்த விதமான நீதிமன்ற அனுமதிகளுமின்றி பலவந்தமாக உட்புகுந்து பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கியதுடன் அலுவலக சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த HQI தலைமையில் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸ் காடையர்கள் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டார்கள். சட்டம், ஒழுங்கைப் பற்றி எதுவுமே தெரியாத காடையர்களுக்கு காக்கி உடை அணிவிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பல பொலிசாரின் சட்டையில் இலக்கம் காணப்படவில்லை என்பதுடன் சிவில் உடையிலும் சில காடையர்கள் அடாவடித்தனத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மாணவர்களினதும், மக்களினதும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல்களை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூதூர் பாட்டாளிபுரத்தில் மாவீரர் நினைவுத்தூபி திறப்பு

மூதூர்க் கிழக்குப் பிரதேசத்தில் பாட்டாளி புரம் கிராமத்தில் மாவீரர் நினைவுத்தூபி நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பொது ஈகச் சுடரை திருகோணமலை மாவட்டத் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார். விடுதலைப்புலிகள் திருமலை மாவட்டப்போர்ப் பயிற்சி ஆசிரியர் கில்மன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அகவணக்கம் செய்யப்பட்ட பின் விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்டக் கட்டளைத்தளபதி கேணல் பதுமன் மாவீரர் நினைவுத் தூபியைத் திரை நீக்கம் செய்துவைத்தார். பின்னர் பாட்டாளி புரத்தை பிறப்பிடமாகக் கொண்ட லெப் டினன்ட் வில்லவன், வீரவேங்கை புலேந்திரன், லெப்டினன்ட் வீரமணி, லெப்டினன்ட் குணபாலன், இரண்டாம் லெப்டினன்ட் கவிதா ஆகியோரின் திருவுருவப் படங்களையும் மாவட்டக் கட்டளைத் தளபதி பதுமன் திரை நீக்கம் செய்து வைத்தார். விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத் தளபதி உதயன் மாவீரர் படங்களுக்கு மலர்மாலை அணி வித்தா் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் முதலாவ தாக மலர் வணக்கம் செய்தார். அதனைத் தொடர்ந்து போராளி கள், பொது மக்கள், மாணவர்கள் மலர் வணக்கம் செய்தனர். பின்னர் விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் செல்வி காருண்யா உரை நிகழ்த்தினார். (27)

# சிங்கள – முஸ்லிம்களிடையே தென்பகுதியில் பதற்ற நிலை

(கொழும்பு)

தம்புள்ள உலன்னாவெவ பகுதியில் நேற்று முன்தினம் முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது பதினொரு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்ட நிலையில் நேற்று இரவு 8மணியளவில் கந்தமை எனும் பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் கடை ஒன்று சிங்களவர்களால் தாக்கப்பட்டுள்ளது. இதன்போது இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இதனால் தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான பதற்றம் அதிகரித்துள்ளது. (32)

# ஜே.வி.பி.யுடனான கூட்டுக் குறித்து சுதந்திரக் கட்சி இன்று ஆராயும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இன்று கூடுகின்றது. சனாதிபதியின் மாளிகையில் இன்று இரவு இந்தக் கூட்டம் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்போது மக்கள் விடுதலை முன்னணியுடன் செய்து கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டு இணைவு தொடர்பில் ஆராயப்படவிருக்கின்றது. ஏற்கனவே இது தொடர்பில் முன்னாள் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தமது அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கின்றது. (32)

## முரசொலிமாறன் மரணம்

இந்திய மத்தியரசின் மூத்த அமைச்சர் முரசொலிமாறன் (வயது-69) நேற்று சென்னையில் காலமானார். இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக நோய் வாய்ப்பட்டிருந்தமை தெரிந் ததே.

## தண்ணீர்...

வெளியிலிருந்த வாளிக்கு மேலால் கால்கள் துடிப்பதைக் கண்ட தந்தையார் மகளை வாளியிலிருந்து அப்புறப்படுத்தி கிளி. மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மேற்படி குழந்தை மரணமாகியதாகவும் தெரிய வந்துள்ளது.

செல்வராசா கிசோடா(வயது - 1) என்ற குழந்தையே மேற்படிச் சம்பவத்தில் பரிதாபகரமாக மரணமானதாகும்.

கிளி. மாவட்ட வைத்திய சாலையில் வைத்து மரணவிசாரணை இடம்பெற்றது. கிளி.காவல் துறையினர் சாட்சிகளை நெறிப்படுத்தினர். கிளி.மாவட்ட மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.வி. கே.திருலோகமூர்த்தி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (சோ)

## மாங்குளம்...

கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் திருவுருவச்சிலையினை தளபதி கேணல் பால்ராஜ் அவர்களும், திருவுருவச் சிலைக்கான நினைவுக் கல்லினை போர்க் அவர்களின் தந்தையாரும் திரைநீக்கம் செய்து வைத்தனர். தொடர்ந்து ஈகச் சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றி வைக்க,திருவுருவச்சிலைக்கான மலர்மாலைகளை போர்க்கின் தாயார், மற்றும் தளபதி மார்ஸ்,மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா மற்றும் கவிஞர் நாவண்ணன் ஆகியோர் அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் மற்றும் மாங்குளம் பங்குத் தந்தை அன்ரனி சுதா, அம்பகாமம் அ.த.க.பாடசாலை அதிபர் நாகேந்திரம் ஆகியோர் நிகழ்த் தி னர்.

சிறப்புரையினை தளபதி கேணல் பால்ராஜ் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசனின் நன்றியுரையினைத் தொடர்ந்து மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

## தேசியக்...

மாவீரர் துயிலுமில்லங்கள், பொது நிறுவனங்கள், பள்ளிகள், இயக்கப் பணிமனைகள், தளகங்கள் என்பனவற்றில் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவீரர் நாளை முன்னிட்டு வன்னிப் பிரதேசமெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. வீதிகளில் பல மாவீரர் நினைவு வளைவுகளும், மாவீரரின் புகழ்கூறும் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரரின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. வீதிகள், வியாபார நிலையங்கள் சிவப்பு-மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

## லெப்.கேணல்...

நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவீரர் அப்பையா அண்ணரின் துணைவியார் செல்வரத்தினம் உருவப்படத்திற்கு ஈகச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அப்பையா அண்ணரின் பங்கு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மலரஞ்சலியைத் தொடர்ந்து திருவுருவப் படம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளின் பின் நினைவுக்கல் திறந்து வைக்கப்பெற்றது. அண்ணரின் துணைவியார் நினைவுக்கல்லினைத் திறந்து வைத்து மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கேணல்கள் சூசை, பானு, தீபன், தினேஷ் மாஸ்டர், மாலதிப் படையணித் தளபதி லெப். கேணல் தமிழ்ச்செல்வி, நிதித்துறைப் பொறுப்பாளர் உட்பட தளபதிகளும், பொறுப்பாளர் களும், போராளிகளும், பொது மக்களுமாக ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## அலங்கார...

வீதி, ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய வற்றை சுற்றி வளைத்து தேடுதல்களையும் விசேட சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் தேடுதல் நடைபெற்றது. மாவீரர் தின ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்களை யும் விரட்டி அடிக்க முயன்றதால் இப்பதற்றம் ஏற்பட்டது.

எனினும் படையினர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாத ஏற்பாட்டாளர்கள் இம்முரண்பாட்டிற்கு காரணமான வீதி வளைவுகளையும், பதாகைகளையும் தம் இஷ்ரப்படியே கட்டி முடித்தனர்.

இதேவேளை, நேற்றைய தினம் யாழ்.சத்திரக்கடைச் சந்திப் பகுதியில் அப்பகுதி மக்களால் அமைக்கப்பட்டு வந்த வீதி வளைவு வீதிப் போக்குவரவுக்கு பெரும் இடையூறாக அமையுமெனக் காரணம் காட்டி அதனை அமைக்கப் படையினர் தடுத்தனர்.

கண்காணிப்புக்குழு மற்றும் பொலிசாருக்கு அவ்வீதி வளைவு ஏற்பாட்டாளர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டினைத் தொடர்ந்து அங்கு வந்திறங்கிய கண்காணிப்புக்குழு மற்றும் பொலிசார் மேற்படி வீதி வளைவினை போக்குவரவுக்கு இடையூறு இன்றி அமைப்பதற்கு அனுமதியை வழங்கினர்.

இதனால், திட்டமிட்டபடி அந்த வீதி வளைவை மக்கள் அமைத்து முடித்தனர்.

நேற்றைய தினம் வேலணையின் துறையூர் மற்றும் ஊர்காவற்றுறைச் சந்திப் பகுதிகளில் மாவீரர் தின அலங்கரிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொது மக்களுக்கே அங்கு சென்ற பொலிசாரால் எச்சரிக்கப்பட்டனர்.

இவ் எச்சரிக்கையால் மக்களுக்கும், பொலிசாருக்குமிடையில் பெரும் வாக்குவாதம் மூண்டதாலும், கண்காணிப்புக்குழுவின் தலையீட்டால் தணித்து வைக்கப்பட்டது.

பொலிசாரின் இத்தகைய செயற்பாடு பொதுமக்களின் மன உணர்வுகளைப் பாதிப்பதுடன் மக்களை வலிந்து ஒரு வன்முறைக்குத் தூண்டும் செயல் என தீவக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதிகளில் ஒலி பெருக்கிகள் மூலம் எழுச்சி கீதங்கள் மற்றும் மாவீரர் தின அறிவிப்புக்களை ஒலிபரப்பக் கூடாது என படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொடிகாமம், சாவகச்சேரி, புத்தூர் சந்தி ஆகிய பிரதேசங்களில் மாவீரர் தினத்தை ஒட்டி எழுச்சி கீதங்கள் மற்றும் அறிவிப்புக்கள் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்த வேளை அங்கு சென்ற படையினர் மற்றும் பொலிசாரே இவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.எனினும் இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவிடம் அனுமதி பெற்று ஒலிக்க விட்டனர். (33)

## தமிழ் மக்களின்...

மிரட்டப்படுகின்றனர். படை உயர் அதிகாரிகள் சிலர் வர்த்தக நிலையங்களிற்கும், வாகனத் தரிப்பிடங்களிற்கும் சென்று மாவீரர் கொடிகளை அறுத்தெறியுமாறு மிரட்டப்படுகின்றனர். தொடர்ந்தும் மாவீரர் நினைவு அலங்காரங்களைச் செய்பவர்கள் கவனிக்கப்படுவார்கள் என வர்த்தகர்கள், சாரதிகள், மாணவர்கள் போன்றோர் படைஅதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். முக்கிய சந்திகள், வீதிகள் என்பவற்றில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளை பலாத்காரமாக எக்காரணமும் இன்றி அகற்றி வரும் படையினர் மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையின் உச்சத்தை நேற்று பரமேஸ்வராச் சந்தியில் நிகழ்த்தியுள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த மாவீரர் நினைவு வளைவை அகற்ற நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கில் திரண்ட படையினர் முயன்றனர். எனினும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் வீதிப்போக்குவரத்து இடையூறு இல்லாத வகையில் அதனை அமைக்க இணக்கம் காணப்பட்டது. இதற்கு சிறிலங்கா பொலிசாரும் படையினரும் உடன்பட்டிருந்தனர்.

இந்நிலையை நேற்று முன்தினம் யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தியில் எம்மால் அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவை இரவு பதினொருமணிக்கு சிங்கள இனவெறிக்காடையன் ஒருவன் தலைமையில் வந்த 150இற்கும் மேற்பட்ட சிங்களக் காடையர்கள் பலவந்தமாக அகற்ற முற்பட்டனர்.

இதனைத் தடுக்க முற்பட்ட எமது மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றிப் பதற்ற நிலை உருவாகியது. சுமார் ஒரு மணி நேர இழுபறியின் பின்னர் இராணுவ வாகனத்தால் வேகமாக மோதி அலங்கார வளைவை அழித்தனர். இதனை ஆட்சேபித்து தடுக்க முற்பட்ட எமது மாணவர்களை வாகனங்களால் மோதிக் கொலை செய்வதற்கு சிங்களப் பேய்கள் முயன்றன.

அதிலிருந்து மாணவர்கள் சாதுரியமான முறையில் மயிரிழையில் தப்பியதை அடுத்து சந்திரிகா அம்மையாரின் ஏவல் நாய்களான படையினரும் பொலிசாரும் துப்பாக்கிப் பிரயோகத்தை மாணவர்கள் மீது மேற்கொண்டனர். அதிலிருந்தும் மாணவர்கள் தம்மைத் தற்காத்துக் கொண்ட நிலையில் படையினர் சிலரே இதில் படுகாயமடைந்தனர்.

அங்கு வரவழைக்கப்பட்ட சிறிலங்காப் பொலிசார் இராணுவ வாகனத்தால் சேதமாக்கப்பட்ட சிகரத்தின் பகுதிகளைத் தமது வாகனத்தில் ஏற்றிய பின் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தினுள் பலவந்தமாகப் பிரவேசித்தனர். உள்ளே நின்ற எமது மாணவர்களை மிக மோசமாகத் தாக்கியதுடன் ஒரு மாணவனை மருத்துவபீட வீதியில் வைத்து கடத்திச் சென்றனர். அம்மாணவன் கடும் சித்திரவதைகளின் பின்னர் நேற்று அதிகாலையில் விடுவிக்கப் பட்டுள்ளார். சர்வதேச தமிழீழ மாணவர் அலுவலகத்தினுள் ஆயுதங்கள் உள்ளன என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி உள்ளேயிருந்த ஆவணங்கள் புத்தகங்கள் என்பவற்றை சேதப் படுத்தினர். 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராவதற்காக அங்கே தங்கியிருந்த சிறுவர்களை சிறுவர் உரிமைகள் பற்றி அதிகம் பீற்றிக்கொள்ளும் சிறிலங்கா அரசின் பொலிசார் காட்டுமிராண்டித் தனமாக அச்சுறுத்தியுள்ளனர்.

பொலிஸ் சீருடைஇன்றியும், பொலிஸ்குறியீட்டு இலக்கங்கள் இன்றியும் ஆயுத முனையில் அத்துமீறி மாணவர் பேரவையினுள் வந்த பொலிசார் கணினிகள், புகைப்படக்கருவிகள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றை அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். பெறுமதி வாய்ந்த இலத்திரனியல் உபகரணங்கள் சிலவற்றைக் களவாடியும் சென்றுள்ளனர்.

தமிழ் மாணவர்களின் நலனுக்காகவும் பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினுள் சோதனை யிடுவதற்கான நீதி மன்ற அனுமதி எதுவுமின்றிப் பலவந்தமாக உள்ளே பிரவேசித்து மேற்கொண்ட அடாவடித்தனங்களை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


மாவீரர் நாள்
2003
நவம்பர் 27
ஈழநாதம்